IN THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

**CC. 419/2017 PW. 3**

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| பெயர் | - | சக்தி பிரசாத் கதிர்காமன் |
| தந்தை/கணவர் பெயர் | - | |
| வயது | - | |
| ஊர் | - | |
| மதம் | - | |

**முதல் விசாரணை** Date: 27/03/2019

நான் தற்போது ராஜபாளையத்தில் சமூக வனச்சரகராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வன வழக்கு பதிவு செய்யும் போது நான் வனவராக வன பாதுகாப்பு படை, களக்காடு புலிகள் சரணாலயத்தில் பணிபுரிந்து வந்தேன். கூடுதல் பொறுப்பாக திருக்குறுங்குடி வனச்சரகம் திருக்குறுங்குடி பிரிவு வனவராக பணிபுரிந்தேன். 22/06/16 அன்று இரவு 11 மணிக்கு வனச்சரகருக்கு கிடைத்த தகவலின் பேரில் வனச்சரகர் மற்றும் நான் திருக்குறுங்குடி பீட் வனக்காப்பாளர், வனக்காவலர் ஆகிய நால்வரும் குழுவாக திருக்குறுங்குடி பீட் ரோந்து பணி செய்தோம். 23/06/16 அன்று காலை சுமார் 6 மணிக்கு திருக்குறுங்குடி பீட் தட்ட பொத்தை சராகம் ஆர்.எப் கல் 18 -லிருந்து 135 மீ தொலைவில் தனியார் விளை நிலத்தில் திரு. ராஜமணி மனைவி பூமணி என்பவரின் நிலத்தில் பயிர் குத்தகை எடுத்துள்ள இசக்கி முத்து (எ) சேட்டையன் மற்றும் சேகர் ஆகியோர் எங்களை பார்த்ததும் மிரண்டு ஓடி ஒழிந்தனர். அப்போது குழுவினராகிய நாங்கள் அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முயன்ற போது சேகர் தப்பி ஓடி விட்டார். இசக்கி முத்து ( எ) சேட்டையன் கையில் பாத்திரம் கழுவும் நிலையில் இருந்ததால் அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது தானும் சேகரும் இயற்கை நீரூற்றில் உயிரோடு நீந்தி வந்த சுமார் 1 1/2 கி.லோ எடையுள்ள உடும்பினை பிடித்து சேகர் என்பவர் வாலை பிடித்து தூக்கி தரையில் அடித்து கொன்று தீயில் வாட்டி பின்பு தான் அதை அரிவாளால் அறுத்து சிறு துண்டுகளாக வெட்டி சமையல் செய்து இருவரும் சாப்பிட்டதாகவும், சமையலுக்கு சேகர் உதவியதாகவும் எங்களிடம் கூறினார். மீதியிருந்த மாமிசத்தை அவர்களிடம் இருந்த 9 நாய்களுக்கு போட்டு விட்டதாகவும் கூறினார். அந்த சமையல் செய்த பாத்திரத்தை தான் கழுவியதாகவும் கூறினார். இந்த வாக்குமூலத்தை பீட் வனக்காப்பாளர் திரு. சாமிநாதன் பதிவு செய்தார். பொருட்களை கைப்பற்றிய ஹச் நமூனாவை அவர் தான் தயார் செய்தார். அதில் நானும் கையெழுத்து செய்தேன். அந்த ஹச் நமூனா அ.சா.ஆ. 4. ஒப்புதல் வாக்மூலத்திலுள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். சம்பவ இடத்திற்கு கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்து வரவழைக்கப்பட்டு அவருடைய முன்னிலையில் எதிரி

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் பின்பு எதிரியையும் பொருட்களையும் கைப்பற்றி எங்களுடைய அலுவலகம் வந்து துணை இயக்குனருக்கு தகவல் கொடுத்து அவருடைய அறிவுறுத்தலின் பேரில் மருத்துவமனை சென்று தேக பரிசோதனையை முடித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>** - சம்பவ இடம் திருக்குறுங்குடிக்கு மேற்கு பக்கம் என்றால் நம்பி கோவிலுக்கு செல்லும் பாதை தான், மேற்கில் தான் அமைந்துள்ளது. ஆர்.எப் கல் 18 -லிருந்து 135 மீ தொலைவு என்பது எந்த திசை என்பது எனக்கு தெரியாது. பூமணியின் தோட்ட விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. மேற்படி தோட்டத்தில் என்ன பருவம் செய்யப்பட்டிருந்தது என்றால் பல வகை மலை சாதி மரங்கள் இருந்தது, குறிப்பிட்டு ஒவ்வொரு மர வகையினையும் கூற இயலாது. இயற்கை நிரூற்று பூமணி தோட்டத்தில் ஒரு பகுதியின் வழியாக செல்கிறது, குறிப்பிட்டு தோட்டத்தின் எந்த பகுதி வழியாக செல்கிறது என்பதை குறிப்பிட்டு கூற இயலாது. நீரூற்றின் நீள, அகலத்தை குறிப்பிட்டு கூற இயலாது. சம்பவ இடம் எந்த கிராம நிர்வாக அலுவலரின் கட்டுபாட்டில் உள்ளது என்று குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது. சம்பவ காலத்தில் களக்காட்டில் பணியாற்றி வருகிறேன் என்றால் திருக்குறுங்குடியிலும் கூடுதல் பொறுப்பு வகித்தேன். சம்பவ இடத்திற்கு இரவு பொழுதில் போகவில்லை. பாத்திரங்கள் என்ன வகை, அதன் கொள்ளவு என்னவென்றால் தெரியாது, அலுமினிய பாத்திரம். அந்த இடத்தில் அவர்கள் தங்குவதற்கு ஒரு கூடாரம் அமைக்கப் பட்டிருந்தது. பாத்திரத்தில் மாமிச வாசம் வந்தது, மசாலாக்கள் எதுவும் அதில் ஒட்டி காணப்படவில்லை. சம்பவ சமயத்தில் தோட்டத்தின் உரிமையாளர் அங்கு வரவில்லை. இரவு 11 மணிக்கு ரோந்துக்கு கிளம்பி சம்பவ இடத்திற்கு காலை 6 மணியளவில் சென்றடைந்தோம். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள விவசாய நிலத்தில் ஆட்கள் யாரும் இல்லை. அலுவலகம் சம்பவ இடத்திலிருந்து சுமார் 2 கி.மீ தூரமிருக்கும். எதிரியிடம் சம்பவ இடத்தில் வைத்தே ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. எதிரிக்கு மருத்துவ பரிசோதனைக்கு என்ன காரணத்திற்காக அழைத்து சென்றோம் என்றால் பொதுவாக நீதிமன்ற காவலுக்கு முன்பு மருத்துவ பரிசோதனை செய்வது வழக்கம். பூமணியின் தோட்டத்தை சுற்றி வேலி அமைக்கப் படவில்லை. சம்பவ இடத்தில் எலும்பு பகுதி, வால் பகுதி எதுவும் கிடந்ததா என்றால் பார்த்தோம், கிடைக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி ரோந்து செல்லவில்லை என்றாலும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் தான் நீருற்றின் நீள, அகலம், பாத்திரத்தின் அளவு குறித்து என்னால் கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் திருக்குறுங்குடி பீட்டில் நான் கூடுதல் பொறுப்பு வகிக்க வில்லை என்றால் சரியல்ல. எனது வனச்சரகர், வனக்காப்பாளர் ஆகியோர் எதிரியிடம் பணம் கேட்டு கொடுக்காத காரணத்தினால் பொய்யாக இந்த வழக்கை தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

**CC. 419/2017 PW. 4**

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| பெயர் | - | சாமி நாதன் |
| தந்தை/கணவர் பெயர் | - | |
| வயது | - | |
| ஊர் | - | |
| மதம் | - | |

**முதல் விசாரணை** Date: 27/03/2019

நான் தற்போது திருக்குறுங்குடி வனசரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். 22/06/16 அன்று இரவு 11 மணிக்கு எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ரோந்து செல்லும் போது 23/06/16 அன்று காலை 6 மணிக்கு திருக்குறுங்குடி பீட் தட்ட பொத்தை சராகம் திரு. ராஜமணி மனைவி பூமணி என்பவரின் நிலத்தில் பயிர் குத்தகை எடுத்துள்ள இசக்கி முத்து (எ) சேட்டையன் மற்றும் சேகர் ஆர்.எப் கல் 18 -லிருந்து 135 மீ தொலைவில் இயற்கை நீரூற்று ஒன்று உள்ளது. அதில் உடும்பு ஒன்று நீந்தி கொண்டிருக்கும் போது எதிரிகள் இருவரும் சேர்ந்து உடும்பினை வாலை பிடித்து தூக்கி தரையில் அடித்து கொன்று தீயில் வாட்டி பின்பு தான் அதை அரிவாளால் அறுத்து சிறு துண்டுகளாக வெட்டி தோலை உரித்து சமையல் செய்து இருவரும் சாப்பிட்டதாகவும், சமையலுக்கு சேகர் உதவியதாகவும் எங்களிடம் கூறினார். மீதியிருந்த மாமிசத்தை அவர்களிடம் இருந்த நாய்களுக்கு போட்டு விட்டதாகவும் கூறினார். அந்த சமையல் செய்த பாத்திரத்தை தான் கழுவிய போது நாங்கள் சென்றோம். அப்போது நடராஜன், சக்தி கதிர் காமன், முருகன், வாச்சன் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை பிடிக்க முற்பட்ட போது சேகர் தப்பி ஓடி விட்டார். இசக்கி முத்துவை மட்டும் பிடித்து விட்டு திருக்குறுங்குடி கிராம நிர்வாக அதிகாரிக்கு தகவல் கொடுத்தோம். அவர் வந்த பிறகு இசக்கி முத்துவிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினோம். ஹச் நமூனா பதிவு செய்யப்பட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசர், ஹச் நமூனாவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இது சம்பந்தமாக வனச்சரகர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை** - என்னை நடராஜன் வனச்சரகர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அ.சா. 2 மற்றும் அ.சா. 3 -டமிருந்தும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் பதிவு செய்தேன். பார்வை மகசரை நான் தான் தயார் செய்தேன். கிராம நிர்வாக அலுவலருக்கு மேல் அதிகாரி தகவல் கொடுத்தார். பொதுவாக ஜீப்பில் இரவு 12 மணிக்கு ரோந்து மேற்கொள்வோம். மறுநாள்

காலை 8 மணியளவில் ரோந்து முடிவுறும். ஜீப் ஓட்டுனர் யார் என்றால் பெயர் ஞாபகமில்லை. மொத்தம் 30 கி.மீ தூரம் ரோந்து செல்வோம். தகவல் கிடைத்த பிறகு தான் ரோந்துக்கு சென்றோம் என்றால் சரிதான். தகவல் கிடைத்தவுடன் உடனே சம்பவ இடத்திற்கு செல்லாததற்கான காரணம் எதுவும் உண்டா என்றால் எதுவுமில்லை. சம்பவ இடம் அலுவலகத்திற்கு 3 கி.மீ தூரத்தில் உள்ளது. சம்பவ இடம் திருக்குறுங்குடி பகுதி 2 கிராம நிர்வாக அலுவலரின் கட்டுபாட்டில் உள்ளது. பார்வை மகசரில் லெவஞ்சிபுரம் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுக்கப் பட்டதாக உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பாத்திரங்களை கைப்பற்றினோம், வேறு எதுவும் கைப்பற்றவில்லை. உடும்பின் தோல், வால் பகுதி எதுவும் கைப்பற்றவில்லை. உடும்பினை வெட்ட பயன்படுத்திய அரிவாள் என்ன அளவு என்றால் சுமார் 2 அடி நீளமுள்ள அருவாள் தான். பாத்திரத்தின் அளவு என்னவென்றால் 1 கிலோ பொரிப்பது போன்ற பாத்திரம். நீருற்றின் நீர் ஆதாரம் எங்கே என்றால் இயற்கை நீரூற்று தான். சம்பவ இடத்தில் வாழை மற்றும் முட் புதர்கள் காணப்பட்டது. எதிரியுடன் காலை 10 மணியளவில் அலுவலகத்திற்கு வந்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தை சுமார் 1 மணி நேரம் பதிவு செய்தோம். அச்சமயத்தில் பக்கத்து தோட்டத்து காரர்கள் யாரும் வரவில்லை. சம்பவ இடத்தில் நாய்களை பார்த்தோம். நாங்கள் ரோந்து போகவில்லை என்றாலும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம், ஹச் நமூனா, பார்வை மகசர் ஆகியவைகள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தோம் என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க எதிரியின் மீது பொய் வழக்கு பதிவு செய்த காரணத்தினால் தான் பார்வை மகசரில் லெவஞ்சி புரம் கிராமம் என்றும், சாட்சியத்தில் திருக்குறுங்குடி கிராமம் என்றும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க எதிரியிடம் பணம் கேட்டு தராத காரணத்தினால் இந்த வழக்கினை பொய்யாக தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

IN THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

**CC. 419/2017 PW. 5**

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| பெயர் | - | முருகன் |
| தந்தை/கணவர் பெயர் | - | |
| வயது | - | |
| ஊர் | - | |
| மதம் | - | |

**முதல் விசாரணை** Date: 27/03/2019

நான் தற்போது திருக்குறுங்குடி வனசரகத்தில் வனக்காவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். 22/06/16 அன்று இரவு 11 மணிக்கு எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ரோந்து செல்லும் போது 23/06/16 அன்று காலை 6 மணிக்கு திருக்குறுங்குடி பீட் தட்ட பொத்தை சராகம் திரு. ராஜமணி மனைவி பூமணி என்பவரின் நிலத்தில் பயிர் குத்தகை எடுத்துள்ள இசக்கி முத்து (எ) சேட்டையன் மற்றும் சேகர் ஆர்.எப் கல் 18 -லிருந்து 135 மீ தொலைவில் இயற்கை நீரூற்று ஒன்று உள்ளது. அதில் உடும்பு ஒன்று நீந்தி கொண்டிருக்கும் போது எதிரிகள் இருவரும் சேர்ந்து உடும்பினை வாலை பிடித்து தூக்கி தரையில் அடித்து கொன்று தீயில் வாட்டி பின்பு தான் அதை அரிவாளால் அறுத்து சிறு துண்டுகளாக வெட்டி தோலை உரித்து சமையல் செய்து இருவரும் சாப்பிட்டதாகவும், சமையலுக்கு சேகர் உதவியதாகவும் எங்களிடம் கூறினார். மீதியிருந்த மாமிசத்தை அவர்களிடம் இருந்த நாய்களுக்கு போட்டு விட்டதாகவும் கூறினார். அந்த சமையல் செய்த பாத்திரத்தை தான் கழுவிய போது நாங்கள் சென்றோம். அப்போது நடராஜன், சக்தி கதிர் காமன், சாமிநாதன் வாச்சன் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை பிடிக்க முற்பட்ட போது சேகர் தப்பி ஓடி விட்டார். இசக்கி முத்துவை மட்டும் பிடித்து விட்டு திருக்குறுங்குடி கிராம நிர்வாக அதிகாரிக்கு தகவல் கொடுத்தோம். அவர் வந்த பிறகு இசக்கி முத்துவிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினோம். ஹச் நமூனா பதிவு செய்யப்பட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசர், ஹச் நமூனாவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இது சம்பந்தமாக வனச்சரகர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை** - என்னை நடராஜன் வனச்சரகர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அ.சா. 2 மற்றும் அ.சா. 3 -டமிருந்தும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் பதிவு செய்தேன். பார்வை மகசரை நான் தான் தயார் செய்தேன். கிராம நிர்வாக அலுவலருக்கு மேல் அதிகாரி தகவல்

கொடுத்தார். பொதுவாக ஜீப்பில் இரவு 12 மணிக்கு ரோந்து மேற்கொள்வோம். மறுநாள் காலை 8 மணியளவில் ரோந்து முடிவுறும். ஜீப் ஓட்டுனர் யார் என்றால் பெயர் ஞாபகமில்லை. மொத்தம் 30 கி.மீ தூரம் ரோந்து செல்வோம். தகவல் கிடைத்த பிறகு தான் ரோந்துக்கு சென்றோம் என்றால் சரிதான். தகவல் கிடைத்தவுடன் உடனே சம்பவ இடத்திற்கு செல்லாததற்கான காரணம் எதுவும் உண்டா என்றால் எதுவுமில்லை. சம்பவ இடம் அலுவலகத்திற்கு 3 கி.மீ தூரத்தில் உள்ளது. சம்பவ இடம் திருக்குறுங்குடி பகுதி 2 கிராம நிர்வாக அலுவலரின் கட்டுபாட்டில் உள்ளது. பார்வை மகசரில் லெவஞ்சிபுரம் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுக்கப் பட்டதாக உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பாத்திரங்களை கைப்பற்றினோம், வேறு எதுவும் கைப்பற்றவில்லை. உடும்பின் தோல், வால் பகுதி எதுவும் கைப்பற்றவில்லை. உடும்பினை வெட்ட பயன்படுத்திய அரிவாள் என்ன அளவு என்றால் சுமார் 2 அடி நீளமுள்ள அருவாள் தான். பாத்திரத்தின் அளவு என்னவென்றால் 1 கிலோ பொரிப்பது போன்ற பாத்திரம். நீருற்றின் நீர் ஆதாரம் எங்கே என்றால் இயற்கை நீரூற்று தான். சம்பவ இடத்தில் வாழை மற்றும் முட் புதர்கள் காணப்பட்டது. எதிரியுடன் காலை 10 மணியளவில் அலுவலகத்திற்கு வந்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தை சுமார் 1 மணி நேரம் பதிவு செய்தோம். அச்சமயத்தில் பக்கத்து தோட்டத்து காரர்கள் யாரும் வரவில்லை. சம்பவ இடத்தில் நாய்களை பார்த்தோம். நாங்கள் ரோந்து போகவில்லை என்றாலும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம், ஹச் நமூனா, பார்வை மகசர் ஆகியவைகள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தோம் என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க எதிரியின் மீது பொய் வழக்கு பதிவு செய்த காரணத்தினால் தான் பார்வை மகசரில் லெவஞ்சி புரம் கிராமம் என்றும், சாட்சியத்தில் திருக்குறுங்குடி கிராமம் என்றும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க எதிரியிடம் பணம் கேட்டு தராத காரணத்தினால் இந்த வழக்கினை பொய்யாக தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.